<u>**சுருக்கம்**</u>

சாலை– சேலம் மாவட்டம் – ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கடலூர் –சேலம் தேசிய நெடுஞ்சாலை 68–ல் அமைந்துள்ள 3.885 கிலோ மீட்டர் நீளம் கொண்ட பைத்தூர் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்தல் –ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசு ஆணை(நிலை) எண்: 4 நாள் 7 .01. 2010

படிக்கப்பட்டது:

1. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.29852/09/இ3, நாள் 6.7.2009.
2. தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5 கடித எண்.29533/சாலை3/2009, நாள் 19.11.2009.

------

<u>**ஆணை:**</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பைத்தூர் சாலை கடலூர்–சேலம் தேசிய நெடுஞ்சாலை எண்.68- லிருந்து தெற்கே தம்மம்பட்டி மற்றும் துறையூர் போன்ற நகரங்களை இணைக்கும் பேருந்து போக்குவரத்து உள்ள சாலை என்றும், மேற்கண்ட சாலை சுமார் 4 கி.மீ வரை நகராட்சி பராமரிப்பிலும், அதற்கு பிறகு நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலும் இருந்து வருகிறது எனவும், மேற்கண்ட சாலை தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து வருவதாலும், பேருந்து போக்குவரத்து மற்றும் கனரக வாகனங்கள் செல்லும் சாலையாக உள்ளதாலும், இச்சாலையைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைத்துறை சாலை ஆரம்பிப்பதாலும் சாலையை பராமரிக்க போதுமான நிதி வசதி நகராட்சியிடம் இல்லாததாலும், நகர்மன்றத் தீர்மானம் எண்.343, நாள் 29.8.2008–ன்படி மேற்கண்ட சாலையை நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைப்பு செய்ய ஆத்தூர் நகராட்சி ஆணையர் அனுமதி கோரி செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் எனத் தெரிவித்து அதனை அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை மேலே இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட உள்ள ஆத்தூர் நகராட்சி சாலையானது தேசிய நெடுஞ்சாலையான சேலம் – உளுந்தூர்பேட்டை சாலை (எண்.68)–ல் கி.மீ.51/2–ல் வலது புறத்தில் பிரிந்து ஆத்தூர் (நெ) உட்கோட்டத்தைச் சார்ந்த ஆத்தூர் பைத்தூர் சாலையில் இணையும் சாலையாகும் என தெரிவித்துள்ளார். மேலும் ஆத்தூர் நகராட்சி சாலையான ஆத்தூர் பைத்தூர் சாலையின் நீளம் 3.885 மீட்டர் (கி.மீ.0/0 – 3/885) என்றும், இதன் தொடர்ச்சி ஆத்தூர் (நெ) உட்கோட்டத்தால் பராமரிக்கப்படும் மாவட்ட இதர சாலையான ஆத்தூர் பைத்தூர் சாலையின் நீளம் 5.4.கி.மீ (3/0 – 8/4) எனவும், இச்சாலை போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்படுகிறது என்றும், ஆத்தூர் நகராட்சி சாலையில் கி.மீ.0/0–2/4 மற்றும் 2/6 – 2/8 வரை ஒடு தள அகலம் 3.75 மீட்டர் ஆக உள்ளது எனவும், கி.மீ.2/4 – 2/6 மற்றும் 2/8 –2/10–ல் ஓடு தள அகலம் 7.00 மீட்டர் ஆக உள்ளது என்றும் மேலும் கி.மீ.3/0 – 3/855–ல் 5.00 மீட்டர் அகலம் காணப்படுகிறது என்றும், ஆத்தூர் நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத நிலையில் இச்சாலையை நகராட்சியின் மூலம் பராமரிக்க இயலாத காரணத்தினால் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் சாலை இல்லை என்றும் தெரிவித்து அச்சாலையினை நெடுஞ்சாலைத் துறை வசம் எடுத்துக்கொள்ள அனுமதி வேண்டியுள்ளார். இது குறித்த ஆணைகள் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையால் வெளியிடப்படும்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பு குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட கடலூர்– சேலம் தேசிய நெடுஞ்சாலை எண்.68–ல் அமைந்துள்ள 3.885 கிலோ மீட்டர் நீளம் கொண்ட பைத்தூர் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்ய அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, சேப்பாக்கம், சென்னை–600 005.
நகராட்சி ஆணையர், ஆத்தூர் நகராட்சி.

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( அந.2) துறை, சென்னை– 600 009.
நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை– 600 009.
இ.கோ./உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.